**தலைப்பு 262 – மாத்தறை மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 262 – மாத்தறை மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருள்மையான கணக்கீட்டு கொள்கைகளுடன் தொடர்பான தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அதுதொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) மாத்தறை மாவட்ட செயலகத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தில் மற்றும் 05 பிரதேச செயலகங்கிற்குரிய ஹெக்டயார் 29.6537 அளவான காணியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றக்களில உள்ளடக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அகுரஸ்ச, அதுரலிய, பஸ்கொட ஆகிய பிரதேச செயலகங்களில் இருந்து காணிகளின் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் கணக்கீடு செய்வதென. | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளிற்கு இணங்க சொத்துக்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்தில் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் 2023 திசெம்பர் 31 திகதியன்று காணி, கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதிக்குரியதாக சிகாஸ் அறிக்கை மற்றும் கொம்ரோளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருந்த அறிக்கை பிரகாரம் ரூபா 341,407,290 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | மாவட்ட செயலகத்தில் மற்றும் 7 பிரதேச செயலகங்களில் காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதி சிகாஸ் அறிக்கை பிரகாரம் மற்றும் கொம்ரோளர் நாயகத்தின் அறிக்கையில் குறைந்த பெறுமதியுடன் காணப்பட்டதால் குறைகளை சீராக்கி சிகாஸ் அறிக்கைக்கு இணங்கியதாக தயாரித்து வித்தியாசத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுத்ததென. | அறிக்கைகளிற்கு இடையில் இணக்கம் செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 திகதிய மற்றும் இலக்கம் 255/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம், மாவட்ட செயலகத்தின் 08 செலவின விடயங்களிற்குரியதாக கூட்டுத் தொகை ரூபா 3,013,739 ஆன பொறுப்புக்கள் மற்றும் 2 பிரதேச செயலகங்களிற்கு உரியதாக கூட்டுத் தொகை ரூபா 26,174 உடன் கூட்டுத் தொகை ரூபா 3,039,913 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த போதும் சிகாஸ் ஊடாக பெறப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் திசெம்பர் மாதத்திற்குரியதாக அனைத்து வவுசர் பத்திரங்களையும் பொறுப்பு பதிவேட்டில் உட்படுத்த முடியுமானவாறு சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்துமாறு பிரிவுப் பொறுப்பு பதவிநிலை உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய ஏற்பாட்டின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட சமுர்தி அலுவலகத்திற்குரிய சாரதி மற்றும் வாகன உதவியாளர் 2017 ஆண்டில் நூபேயில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் சபைக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த போதும் 2020 நவம்பர் முதல் இணைப்பதற்காக திவி நெகும பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அத்திகதி முதல் 2023 மார்ச் 13 வரை அங்கீகாரமின்றி இந்த ஊழியர்கள் இருவரிற்கும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,509,533 செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தியுள்ள சம்பளத்தை அறவிட நடவடிககை எடுத்துள்ளதென. | தேவையான அங்கீகாரத்திற்கு இணைத்தல் செய்ய வேண்டும். |
| (ஆ) | மாத்தறை மாவட்ட சமுர்த்தி பயிற்சி நிலையத்தில் ஒரு கெப் வண்டி மாத்திரம் இருக்கையில் அந்த நிறுவனத்திற்கு மூன்று சாரதிகளை இணைத்துள்ளதால் எவ்வித ஆக்கபூர்வமான சேவையையும் | குறித்த அலுவலர்களை இடமாற்ற சமுர்தி பணிப்பாளர் நாயகத்தை அறிவூட்டியுள்ளதென. | மேலதிக அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளாது 2020 செப்டம்பர் 21 மற்றும் 2022 நவம்பர் 28 திகதி ஆட்சேர்த்த இரண்டு மேலதிக சாரதிகளிற்கு 2023 ஜுன் 30 வரை ரூபா 1,976,230 ஆன சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கிராமப்புர மற்றும் பாடசாலை விளையாட்டு, உட்பட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மூலம் செயற்படுத்திய கிராமிய மைதானங்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் திக்வெல்ல, அதுரலிய மற்றும் வெலிபிடிய பிரதேச செயலக பிரிவில் கூட்டுத் தொகை ரூபா 4,286,251 செலவில் 03 மைதானங்களை அபிவிருத்தி செய்திருந்ததுடன் மைதானங்கள் நோக்கத்திலான பணிகளிற்கு பயன்படுத்தப்படாது விளைவற்று நிலவின. | குடிநீர், மலசலகூட வசதிகள் மற்றும் ஆடை மாற்றிடம் இல்லாமை மற்றும் வலைப்பந்து மற்றும் கிரிகட் விளையாட இடவசதி போதாமையின் மீது மைதானத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ளவது பிரச்சினையாகவுள்ளது. | கருத்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பெறுந்தோட்ட, பித்தளை, மற்பாண்டம், மரத் தளபாடம் மற்றும் கிராம கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | | |
| (i) | கிராமிய மற்றும் பாரம்பரிய கூட்டிணைந்த நிகழ்சித் திட்டத்தின் கீழ் அகுரஸ்ஸ பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் கியாண்டுவ மற்றும் களபடஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மூங்கில் சார்ந்த உற்பத்தி கிராமத்தில், மூங்கில் கைத்தொழிலாளர்களிற்கு ரூபா 1,745,067 செலவில் வேலைத் தளமொன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் அந்த வேலைத் தளம் குறித்த பணிகளிற்கு பயன்படுத்தப்படாது விளைவற்று நிலவியது. 2021 திசெம்பர் ரூபா 338,443 செலவில் மூங்கில் சார்ந்த பொது வசதிகள் நிலையத்தின் பொது பயன்பாட்டிற்காக 26 வகையான 208 உருப்படிகளை கொள்வனவு செய்து அந்த உபகரணங்கள் விளைவற்று களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் இயந்திரங்களின் உத்தரவாத காலம் முடிவடைந்து 1 ½ ஆண்டுகள் கடந்திருந்தன. | கட்டிட பாதுகாப்பு போதியதாக இல்லாததால் சில பொருட்கள் தனிப்பட்ட வகையில் வீடுகளில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மின்சாரத்தில் காணப்படும் பிரச்சினை காரணமாக சில பொருட்களை பயன்படுத்துவதில்லையென. | ஊட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து இந்த கட்டிடத்தை மற்றும் உபகரணங்களை உற்பத்தி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வெலிகம் பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் கும்பல்கம் சிவப்பு மற்பாண்டம் சார்ந்த உற்பத்தி கிராமமொன்றை ஆரம்பித்து நலன் பெறுனர் ஒருவருக்கு ரூபா 75,000 வீதம் 19 நலன் பெறுனர்களிற்கு கூட்டுத் தொகை ரூபா 1,425,000 பெறுமதியான நிர்மாண பொருட்கள் வழங்கப்பட்டு இருந்த போதும், பௌதீக பரீட்சிப்பின் போது நலன்பெறுனர்கள் அந்த பொருட்களை நோக்கத்திலான பணிகளிற்கு பயன்படுத்தி இருக்கவில்லை. | மூலப்பொருட்களை தேடிக் கொள்வதில் காணப்படும் கடினம் காரணமாக கைத்தொழில் தற்காலிகமாக நின்றுள்ளதுடன் நலன்பெறுனர்களிற்கு வேலைத் தளங்களை நிர்மாணிக்க வழங்கிய பொருட்களை பயன்படுத்தி வீட்டிற்கு பக்கத்தில் நிர்மாணித்து வேறு பணிகளிற்காக பயன்படுத்துவதென. | கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டும். |
| (iii) | ஒரு கிராமத்திற்கு ஒரு முயற்சியாளரை உருவாக்கும் கருத்திட்டத்தின் கீழ் 06 பிரதேச செயலகங்களில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது 83 நலன்பெறுனர்களிற்கு ரூபா 4,906,540 அரசாங்க பங்களிப்பின் கீழ் வழங்கிய பல்வேறு உபகரணங்கள் குறைபயன்பாட்டுடன் மற்றும் விளைவற்று நிலவின. | குறைபயன்பாட்டு சொத்துக்கள் தொடர்பாக கண்டறிந்து முன் நடவடிக்கை மேற்கொள்வதென. | சிறந்த பின்னூட்டல் செயன்முறையின் மூலம் மீண்டும் கருத்திட்டதிதை செயற்படுத்த வேண்டும். |
| (உ) | சமுர்த்தி மனை பொருளாதார, நுன்பாக, நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தி சௌபாக்கி உற்பத்தி கிராம நிகழ்சித் திட்டம் | | |
| (i) | அகுரஸ்ஸ பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் இரண்டு கிராம உத்தியோகத்தர் விரிவுகளில் நாற்று மேடை கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த 101 நலன் பெறுனர்களிற்கு கூட்டுத் தொகை ரூபா 4,953,464 உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த கிராம உத்தியோகத்தரி பிரிவுகளில் தெரி செய்யப்பட்ட 08 நலன்பெறுனர்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 403,670 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் நிலவின. | சில நலன்பெறுனர்கள் மாத்திரம் கருத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு செல்கின்றரென. | கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் நலன்பெறுனர்களிற்கு காணப்படும் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வேலிபிடிய, வெலிகம் மற்றும் கொடபொல 03 பிரதேச செயலகங்கள் இற்காக சமுர்த்தி மனை பொருளாதார, நுன்பாக, நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஏற்பாடு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து கிடைத்த கூட்டுத் தொகை ரூபா 3,884,150 ஏற்பாட்டின் செலவில் 409 சமுர்த்தி குடும்பங்களிற்கு 8972 கொழிக் குஞ்சிகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் ரூபா 3,101,450 பெறுமதியான 7234 கோழிக் குஞ்சிகள் 2024 சனவரி அளவில் இறந்திருந்தன. மேலும் குஞ்சிகள் இறப்பதால் கொடபொல பிரதேச செயலகத்தில் 40 நலன்பெறுனர்களிற்கு கோழக் கூடுகளை அமைக்க வழங்கியிருந்த ரூபா 2,200,000 தொகையும் விளைவற்றிருந்தது. | கோழிக் குஞ்சிகளிற்கு கொடுக்கும் தீனின் விலை அதிகரித்தமை, பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமை, அலுவலர்களின் பின்னூட்டல் உரியவாறு இடம்பெறாமை மற்றும் நலன்பெறுனர் ஊக்கம் குறைந்தமை போன்ற காரணங்களால் கருத்திட்டம் தோல்வியடைந்துள்ளது. | ஆரோக்கியமான கோழிக் குஞ்சிகளை பெற்றுக் கொள்ளல் ஊக்கப்படுத்தும் வகையில் பின்னூட்டலை ஒழுங்குபடுத்தி நலன்பெறுனர்களை மீண்டும் கருத்திட்டத்திற்கு உட்படுத்தி கருத்திட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும். |
| (iii) | வெலிகம் பிரதேச செயலகத்தினால் மரக்கறி உற்பத்தி கிராம 65 மரக்கறித் தோட்ட விவசாயிகளிற்கு ரூபா 4,929,000 செலவில் 930 ஜீ.ஐ குழாய்கள் வழங்கப்பட்டிருந்தன. மரக்கறி உற்பத்தி பயிர்கள் முற்றாக அழிவடைந்த காரணத்தால் ஜீ.ஐ குழாய்கள் விளைவற்றிருந்தன. | மரக்கறி உற்பத்தி கருத்திட்டம் சீரற்ற காலநிலை மற்றும் நில அமைபின் மீது தோல்வி அடைந்ததென. | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் சரியான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (iv) | அதுரலிய, முலடியன மற்றும் திஹகொட 03 பிரதேச செயலங்களின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முறையே பதிக் உற்பத்தி, கருவா கலற்றுதல் மற்றும் மூங்கில் சார்ந்த அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக 83 நலன்பெறுனர்களிற்கு ரூபா 5,566,376 பெறுமதியான 611 உபகரண உருப்படிகள் குறித்த பணிகளிற்காக பயன்படுத்தாது விளைவற்று நிலவின. மேலும் அதுரலிய முலடியன பிரதேச செயலத்தின் மூலம் பதிக் உற்பத்திக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 524,480 பெறுமதியான இரசாயன டய் வகைகள் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தாது காலாவதியாகி இருந்தன. | ஏதிர்காலத்தில் இந்த நிலைமைகளை தவிர்த்துக் கொள்ள பின்னூட்டல் செய்வதென. | பின்னூட்டல் உரியவாறு மேற்கொள்ள வேண்டியதுடன் குறித்த அனைத்து நலன்பெறுனர்களை யும் பதிக் தொழிலிற்கு ஈடுபடுத்த ஊக்கப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | கொடபொல பிரதேச செயலக பிரிவில் 02 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 30 நலன்பெறுனர்களிற்கு ரூபா 360,000 பெறுமதியான 3000 ஏலக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ள போதும் பயிர் கருத்திட்டம் தோல்வி அடைந்த காரணத்தால் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கப் பெறவில்லை. | ஏலம் பயிச் செய்கை அழந்துள்ளதென. | பின்னூட்டல் உரியவாறு மேற்கொள்ளளும், நலன்பெறுனர்களை அறிவூட்டி அவர்களை உற்பத்தி செயற்பாடுகளிற்கு மீண்டும் ஈடுபடுத்த வேண்டும். |
| (ஊ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் செயற்படுத்திய சமுர்த்தி நலன்பெறுனர்கள் மற்றும் குறைந்த வருமானமுடையவர்களின் வாழ்கை நிலையை வலுவூட்டும் நிகழ்சித் திட்டம். | | |
| (i) | முலடியன பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் வலுவூட்ட இயலுமான 72 சமுர்த்தி நலன்பெறும் குடும்பங்களைவ லுவூட்டும் நோக்கில் அரச பங்களிப்பாக ரூபா 2,848,900 செலவிட்டு நலன்பெறுனர்களிற்கு உபகரணங்கள் வழங்கியிருந்த போதும் அந்த நலன்பெறுனர்கள் சமுர்த்தி நலன்களை தொடர்ந்து பெறுவதனால் வலுவூட்டும் என்னும் நோக்கம் அடையப் பெற்றிருக்கவில்லை. | சமுர்த்தி நலன்பெறுனர்கள் வலுவூட்டப்படவில்லை எனவும், அதற்கு காரணமாகவுள்ளது பொருளாதார கஷ்டங்களாகும். | நலன்பெறுனர்களின் இயலுமையை இனங்கண்டு உபகரணங்களை விநியோகிக்க வேண்டியதுடன் சிறந்த பின்னூட்டல் முறையூடாக நலன்பெறுனர்களின் ஊக்கத்தை விருத்தி செய்ய வேண்டும். |
| (ii) | பஸ்கொட பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 48 குறை வருமான குடும்பங்களிற்கு 2021 ஆண்டில் ரூபா 2,127,093 அரச பங்களிப்பின் கீழ் தேயிலை கன்றுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.<br>நலன்பெறுனர்களில் 71 சதவீதம் 2023 ஆண்டு வரை சமுர்த்தி நலன்களை பெறுவதனால் அவர்களை வலுவூட்டும் நோக்கம் அடையப் பெற்றிருக்காததுடன் செலவிடப்பட்ட ரூபா 2,127,093 ஆன செலவினம் ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை. | பிரிவுப் பொறுப்பு மேற்பார்வை அலுவலரின் பின்னூட்டல் நடவடிக்கை உரியவாறு இடம் பெறாததால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. | சிறந்த பின்னூட்டல் முறையூடாக நலன்பெறுனர்களின் ஊக்கத்தை விருத்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் செயற்படுத்திய சமுர்த்தி அருனழு சீவனோபாய அபிவிருத்தி கருத்திட்டம். | | |
| (i) | முலடியன பிரதேச செயலக பிரிவில் 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 106 நலன்பெறுனர்களிற்காக வழங்கிய 12,703 கருவா கன்றுகளில் ரூபா 783,120 பெறுமதியான 9785 கன்றுகள் சரியாக பராமரிக்காத காரணத்தால் அழிந்திருந்தன. | நிலவிய வரட்சி காரணமாக கன்றுகள் அழிந்துள்ளதென. | மொத்த கருத்திட்டம் தொடர்பாக பின்னூட்டல் நடவடிக்கைகளை முறையாக செய்ய வேண்டும். |
| (ii) | முலடியன பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மூன்று நலன்பெறுனர்களிற்கு வழங்கிய ரூபா 705,001 பெறுமதியான நான்கு பசு மாடுகளில் மூன்று நலன்களை பெற்றுக் கொள்ள முன்னர் இறந்துள்ளதுடன், இன்னும் ஒரு பசு மாடு 1 வருடம் 06 மாதங்கள் கடந்துள்ள போதும இன்னும் கன்றுகளை ஈனவில்லை. அதன் பிரகாரம் மாடுகளிற்கு அரசினால் செலவிட்ட செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்களானது. | கால்நடைகள் இறந்துள்ளதென. | கால்நடைகளை வழங்கும் போது ஆரோக்கியமான கால்நடைகளை வழங்க வேண்டும். |
| (ஏ) | சனாதிபதி அலுவலக செலவின தலைப்பு ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்திய மாதறை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட கிராம் சக்தி முதலாம் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டத்தில் 09 சங்கங்கள் செயலற்று காணப்பட்டதுடன் 2023 மார்ச் 31 திகதியன்று அச் சங்கங்களின் கணக்குகளில் ரூபா 3,560,430 செயலற்று நிலவின. | சங்கங்களை தொடர்சியாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | செயற்படாத சங்கங்களிடம் காணப்படும் பணத்தை சுவீகரிக்க அல்லது அந்த சங்கங்களை செயற்படுத்த நடவடிகை எடுக்க வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| | xix ஆம் அதியாயத்தின் 5 பிரிவு | 157,141 | அரச இல்லமொனறில் வசிக்கும் அகுரஸ்ஸ உதவி பிரதேச செயலாளரிடமிருந்து 2021 திசெம்பர் முதல் 2023 திசெம்பர் வரையான காலத்திற்கான இல்ல வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உதவி பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லமாக அட்டவணைப்படுத்த கோரியுள்ளதுடன் கோரிக்கைக்கு கிடைக்கும் பதிலின் பிரகாரம் அறவிடப்படுதென. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிககை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009 கொண்ட பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 2.iv பந்தி | 275,548 | கிரந்த புகுள்வெள்ள பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய 13 அலுவலர்களினால் 2023 சனவரி முதல் செப்டம்பர் வரை விரல் அடையாள இயந்திரத்தில் குறிக்காமல் விடுமுறை தின சம்பளம் மற்றும் மேலதிக நேர படிகளை பெற்றிருந்தனர். | எதிர்காலத்தில் இந் நிலைமை பற்றி கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (இ) | 2008 ஆகஸ்ட 20 திகதிய இலக்கம் 2008/04 காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | | அரச காணிகளை அனுமதியின்றி கைப்பற்றி 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அனுமதியற்ற வதிவாளர்கள் தொடர்பாக தெவிநுவர பிரதேச செயலகத்தினால் | அனுமதியற்ற கைப்பற்றல் முறையாக்கப்பட்டுள்ளதுடன் இருவார அறிக்கையை சமர்ப்பிக்க கிராம | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முறையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன் காணிக் கட்டளை இலக்கம் 180 பிரகாரம் 33 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர்களால் அனுமதியற்ற காணி கைப்பற்றுதல் தொடர்பாக பதிவேடொன்றை பேணி அது தொடர்பான இருவார அறிக்கை பிரதேச செயலாளரிற்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | உத்தியோகத்தர் களை அறிவூட்டி உள்ளதென. |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று மாத்தறை மாவட்ட செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களின் கூட்டுத் தொகை ரூபா 14,647,262 ஆன 02 ஆண்டுகளை விஞ்சிய 111 வைப்வு மிதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்புக்களை விடுவிக்க குறித்த பிரிவுகள் அறிவூட்டப்பட்டதென. | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/04 ஆம் இலக்க காணி காணி ஆணையாளர் சுற்றறிக்கை பிரகாரம் காணிகளை முறைமையாக்க பஸ்கொட பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 22 கிராம் உத்தியோகத்தர் பிரிவுகளில் கடந்த 04 ஆண்டுகளினுள் காணிக் கச்சேரிகளை நடாத்தியிருக்காததுடன் 1070 பர்சஸ்களிற்குரிய 10 வதிவாளர்களின் நீண்ட கால குத்தகை பத்திரத்தை தயாரிக்க கடந்த 03 ஆண்டுகளினுள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய நிறுவனங்களின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஒப்படைப்பதென. | விரைவில் நீண்ட கால குத்தகை பத்திரங்களை தயாரித்து வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கிரிந்த புஹுல்வெல்ல, கம்புருபிடிய, மாலம்பட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 79 வதிவாளர்கள் அரச காணிகளை அனுமதியின்றி பயன்படுத்திய போதும் அவற்றை கடந்த 02 ஆண்டுகள் முதல் 16 ஆணடுகள் வரை முறைமையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஒப்படைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதெனை. | விரைவில் அங்கீகாரத்தை பெற்று ஒப்படைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை பிரதேச செயலகத்தினால் குறை அபிவிருத்தியுடைய மதப் பள்ளிகளை மேம்படுத்தும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் ரூபா 250,000 செலவிட்டு மதப் பள்ளியொன்றில் குறைபாட்டுடன் நிர்மாணிக்கப்பட்ட மாசலகூடம் ஒன்றின் அங்கரிக்கப்பட்ட திட்டம், அனுமதியின்றி மாற்றப்பட்டு இருந்ததுடன், செய்யப்படாத 05 வேலைகளிற்காக ரூபா 28,670 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதிய 2023 ஆகஸ்ட் 10 திகதி வரை முழுமையாக வேலைகளை பூர்த்தி செய்யாததன் மீது அந்த மலசலகூடங்களை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. | அங்கீகாரம் பெறப்படவில்லை எனவும் நிறுத்தற் பணம் விடுவிக்கப்படவில்லை எனவும். | மதிப்பீட்டை மாற்றும் போது முன்கூட்டிய அங்கீகாரம் பெற வேண்டியதுடன் செலவிட்ட தொகைக்குரிய பலனை பெற்றுக் கொள்ள நடவடிகைகை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திக்வெல்ல பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்த 25 வேலை விடயங்களிற்காக ரூபா 724,924 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்து அளவுப் பத்திரம் தயாரிக்காது ரூபா 722,975 செலுத்தப்பட்டிருந்தது. அங்கீகார மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் ரூபா 281,271 பெறுமதியான 10 வேலை விடயங்கள் செய்யப்பட்டு இருக்காததுடன் மதிப்பீட்டில் குறிப்பிடப்படாத ரூபா 183,594 பெறுமதியான 10 வேலை விடயங்களிற்கு கொடுபனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவை 8.13 பந்தி பிரகாரம் கைவிடப்பட் வேலை, மாற்றுதல் மற்றும் மேலதிக வேலைக்காக அங்கீகாரத்தை பெறாது 14 வேலை விடயங்களிற்கு செலுத்தியதால் மதிப்பீடு மற்றும் இறுதி பட்டியலிற்கு இடையே ரூபா 180,092 வித்தியாசம் காணப்பட்டது. | கைச்சாத்திடப்பட்டுள்ளது அங்கீகார மதிப்பீட்டிற்கு எனவும் மேற்கொண்ட வேலை பகுதிகளில் அங்கீகார மதிப்பீட்டின் வேலை பகுதிகள் இல்லையென. | கைச்சாத்திடப்பட்ட அங்கீகார மதிப்பீட்டின் வேலை பகுதிகளை மேற்கொள்ள வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முலடியன பிரதேச செயலக அதிகார பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவென்றில் மூடப்பட்ட பாடசாலையொன்றை நவீனமயமாக்கி அந்த பாடசாலையினும் கருவா உற்பத்திக்கு தேவையான பயிற்சி பாடநெறியை நடாத்துதல் மற்றும் அதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய ரூபா 6,905,652 செலவில் குறித்த கட்டிடத்தை நவீனமயமாக்கி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அன்மித்த இடமொன்றில் அரசினால் கருவா ஆராய்ச்சி நிலையமொன்றை நடாத்தி செல்வதால் இந்த கட்டிடம் மற்றும் உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமையின் மீது ஏற்பாடு கிடைக்காததால் பலொல்பிடியே பயிற்சி நிலையமொன்றை நடாத்துதல் போன்ற காரணங்களால் எதிர்பார்த்தவாறு பயிற்சி பாடநெறிகளை மேற்கொள்ள முடியாததென. | குறித்த கட்டிடத்தை பொறுத்தமான நடவடிக்கை ஒன்றிற்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டில் கிராமத்துடன் உரையாடல் நிகழ்சித் திட்டத்தின் கீழ் கம்புருபிடிய பிரதேச செயலக பிரிவில் சேவைகள் கூடத்தை நிர்மாணிக்க ரூபா 1,164,957 தொகை செலவிட்ட போதும் சேவைகள் கூட மலசலகூடத்திற்கு நீர் வழங்கல் தொடுக்கப்படாததால் ஓராண்டிற்கு அதிக காலமாக குறை பயன்பாட்டுடன் நிலவியது. | சேவைகள் கூடத்தை நிர்மாணிக்கும் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதென. | உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்து கட்டிடத்தை பயன்படுத்த வேண்டும். |
| (இ) | கிராமத்துடன் உரையாடல் நிகழ்சித் திட்டத்தின் கீழ் அதுரிலிய பிரதேச செயலக பிரிவில் கமநல சங்கமொன்றிற்கு வழங்கியிருந்த ரூபா 230,000 பெறுமதியான இயற்கை பசளை உற்பத்திக்கு தேவையான குப்பைகளை துண்டாக்கும் இயந்திரம் கடந்த 1 ½ வருட காலத்தினுள்ளே கமநல சங்க செயலாளரின் வீட்டில் குறை பயன்பாட்டுடன் நிலவின. | எதிர்காலத்தில் இயற்கை பசளை உற்பத்திக்கு ஈடுபடுத்துவதென. | இயந்திரத்தை நோக்கத்திற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 நட்டம் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 104(4) மற்றும் 156(1) பிரகாரம், 03 பிரதேச செயலகங்களில் | விரைவில் அதன் அறிக்கைகளை பெற்று | சேதம் மற்றும் நட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 05 வருட காலமாக பெறுமதி ரூபா 246,275 ஆன சேதம் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கைகளை முடிவுறுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென. | தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2012 மே 25 திகதிய 1759/44 வர்த்தமானி மற்றும் 2017 சனவரி 26 திகதிய 2003/29 கொண்ட வர்த்தமானி மூலம் திஹகொட மற்றும் தெவிநுவர பிரதேச செயலக அதிகார பிரதேசங்களில் முறையே தனியார் காணிகள் ஹெக்டயார் 2.18996 மற்றும் ரூட் 01 பர்சஸ் 1.092 இனை சுவீகரித்து காணியற்ற நபர்களிற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 8,597,150 ஆன மொத்த இழப்பீட்டுத் தொகையையும் உரியவாறு செலுத்தாததால் காணிகளை சுவீகரிக்கும் சட்டத்தின் 460 அத்தியாயத்தின் 261(4) பிரிவின் பிரகாரம் ரூபா 3,238,980 ஆன மேலதிக வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. | ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளதென. | அலுவலர்களின் கடமை தாமதத்தின் காரணமாக அரசிற்கு ஏற்படும் நட்டத்தை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேளபாக்கி உற்பத்தி கிராம நிகழ்சித் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக திஹகொட பிரதேச செயலக பிரிவில் படுவிட 1 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 8.78 பர்சஸ் காணியை அரசிற்கு சுவீகரிக்காது ரூபா 2,903,630 செலவில் சேவைகள் கூடமொன்றை நிர்மாணித்துள்ள போதும் காணியை அரசிற்கு சுவீகரிக்காததால் உட்கட்டமைப்பு அபிவிருத்தி எனும் நோக்கம் அடையப்பெறவில்லை. | சுவீகரிப்பு இடம்பெறவில்லை என. | காணி சுவீகரிப்பை விரைவுபடுத்த வேண்டும். |
| (இ) | இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சேவையாற்றும் சமுர்த்தி அலுவலர்களினால் சமுர்த்தி பெறுனர்களின் பெயர் பட்டியலை நாளாதுவரை ஆக்காததால் 1995 முதல் 2016 மார்ச் 21 திகதி வரை விஹாரையில் மற்றும் பிரிவெனவில் கடமையில் இருக்காத | ஆரம்ப புலனாய்வொன்றை மேற்கொண்டு பணத்தை அறிவிடுவதென. | கூடுதலாக செலுத்திய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதகுருமார்களிற்கு சமுர்த்தி நிவாரணமாக ரூபா 1,264,610 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | அஸ்வெசும நலன்பெறுனர்கள் 47068 பேர்களை தெரிவு செய்யும் கணிப்பீட்டு நடவடிக்கைகள் அரச அலுவலர்கள் அல்லாத வெளி நபர்களின் மூலம் மேற்கொண்டமைக்கு 05 பிரதேச செயலங்களினால் கூட்டுத் தொகை ரூபா 14,949,518 செலுத்தப்பட்டு இருந்தபோதும், அவ்வாறு தெரிவு செய்த நலன்பெறுனர்களில் 51 சதவீத்திற்கும் 87 சதவீதத்திற்கும் இடையிலான அளவான நலன்பெறுனர்களினால் ஆஸ்வெசும நலன்கள் தொடர்பாக மேன்முறையீடு மற்றும் எதிர்ப்பை சமர்ப்பித்துள்ளதால் குறித்த செலவு சிக்கனமற்ற செலவாக இருந்தது. | நலன்புரி நலன்பெறுனர்களை இனங்காணும் நிகழ்சித் திட்டத்திற்கு உரியதான எதிர்ப்பு மற்றும் மேன்முறையீடு தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருவதென. | அரச நிதியை மிகவும் ஆக்கபூர்வமாக செலவிட அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும். |
| (உ) | 2007 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் வெலிபிடிய பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் மற்றும் திருத்த வேலைகளிற்காக ரூபா 11,816,497 செலவிட்டிருந்த போதும் அந்த உத்தியோகபூர்வ இல்லம் கடந்த 16 வருடங்களாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்று காணப்பட்டது. | உத்தியோகபூர்வ இல்லத்தில் எவரும் குடியிருக்கவில்லையென. | அரச நிதியை அத்தியவசிய செலவிற்காக சிக்கனமாக பயன்படுத்த கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | திக்வெல்ல பிரதேச செயலகத்திற்கு உரிய அட்டவணைப் படுத்திய உத்தியோகபூர்வ இல்லமொன்று 2022 ஆண்டில் ரூபா 722,975 செலவில் திருத்தி 15 மாதங்கள் கடந்திருந்த போதும் உத்தியோகபூர்வ இல்லம் குறைபயன்பாட்டுடன் நிலவியது. பெண் உதவி பிரதேச செயலாளர் ஒருவருக்கு தனியார் வீடொன்றை வாடகை அடிப்படையில் பெற்று குடியிருந்த மேற்குறித்த காலத்திற்கு ரூபா 300,000 உத்தியோகபூர்வ இல்ல படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் எந்த அலுவலரும் குடியிருக்க விருப்பமில்லையென. | அலுவலர்களிற்கு ஒதுக்கிய அரச இல்லமொன்று இருக்கையில் தனியார் வாடகை வீடொன்றிற்காக அரச நிதியை செலவிடக் கூடாது. |
| (எ) | கம்புருபிடிய பிரதேச செயலக பிரிவில் கதார கிராம் உத்தியோகத்தர் பிரிவில் அரசிற்குரிய வெலிஹேனகொட குட்டிய எனும் காணியின் 20 பர்சஸ காணித் துண்டொன்றை 2004 ஆண்டில் மற்றும் விடியல் கிழக்கு கிராம் உத்தியோகத்தர் பிரிவில் அரசிற்குரிய ஹெக்டயார் 0.0365 ஆன காணியொன்றின் பகுதியொன்றில் | அனுமதியின்றி கைபற்றுதல் தொடர்பாக சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக காணி ஆணையாளரிடம் விடயங்களை விசாரித்து கடிதமொன்றை அனுப்பியதாக மற்றும் உதவி பிரதேச செயலாளர் | குறித்த கம்பனியிடம் இருந்து நிலுவை வரி அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொலைபேசி கம்பனி ஒன்றினால் அனுமதியின்றி கைப்பற்றி தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன் கணக்காய்வு திகதி 2023 நவம்பர் 24 திகதி வரையும் குறித்த கம்பனியிடமிருந்து எவ்வித குத்தகையும் அறவிட்டிருக்கவில்லை. | உள்ளிட்ட குடுவொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த மதிப்பீட்டின் மீது தொலைபேசி கம்பனிக்கு வரி செலுத்துமாறு அறிவித்ததென. | |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குளை அடைந்து கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் சமர்ப்பித்திருந்த நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் மற்றும் முன்னேற்றத்தினுள் மாவட்ட செயலகத்திற்கு உரியதாக 08 நோக்கங்களி இனங்காணப்பட்டு இருந்த போதும், அதற்குரியதாக சுற்றறிக்கை மூலம் சுட்டிக் காட்டியுள்ள திட்டவட்ட குறிகாட்டிகளை இனங்கண்டு அவற்றின் முன்னேற்றத்தை சமர்ப்பித்திருக்கவில்லை. 2023 ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் முன்னேற்றத்தை அளப்பதற்கான குறிகாட்டிகளை பயன்படுத்துவது தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி ஆணைக்குழுவின் அறிவுறை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு கடந்த ஆண்டு அறிக்கையிட்டுள்ள போதும், நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்சி நிரலில் வருடாந்தம் அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் குறியீட்டு மட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக செயன்முறை ஒன்றை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் இயலுமான வரையில் குறிகாட்டிகளை திட்டவட்டமாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக மற்றும் நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்திற்கு உரியதாக முன்னேற்றத்தை அரையாண்டுகளில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் பிரதேச செயலகங்களில் உயர் மட்ட ஒரு பதவியில் மற்றும் மூன்றாம் மட்ட 02 பதிவிகளில் 05 வெற்றிடங்களும், இரண்டாம் மட்ட 06 பதவிகளில் 149 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப மட்ட ஒரு பதவியில் 02 பெற்றிடங்களுமாக மொத்த வெற்றிடங்கள் 157 நிலவின. | நியமன அதிகாரி பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு உரியதாகையால் அந்த அமைச்சினால் ஆட்சேர்த்து வெற்றிடங்களை நிரப்ப வேண்டுமென. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | பிரதேச செயலகங்களில் ஒரு மூன்றாம் மட்ட பதவியில் ஒரு மிகையும், இரண்டாம் மட்ட 01 பதவிக்குரிய 407 அலுவலர்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் 32 அலுவலர்களுடன் 440 மிகையும் நிலவின. | நியமன அதிகாரி பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு உரியதாகையால் அந்த அமைச்சினால் ஆட்சேர்த்து வெற்றிடங்களை நிரப்ப வேண்டுமென. | மிகைக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 திகதி இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அசைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள திட்டமொன்றை தயாரித்து இருக்காததுடன் மொத்த ஆளணியினரிற்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | மனிதவள திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள திட்டமொன்றை தயாரித்து வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (ஈ) | 2001 ஆகஸ்ட் 22 திகதிய இலக்கம் 18/2001 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் ஒரே நிறுவனத்தில் 5 ஆண்டுகளை விட அதிக காலம் கடமையாற்றும் அலுவலர்களை இடமாற்றம் செய்ய வேண்டிய போதும் 10 பிரதேச செயலகங்களில் 105 பதவிகளிற்குரிய 1031 அலுவலர்கள் 05 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரையான கால வீச்சளவில் ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றியிருந்தனர். | ஒரே நிறுவனத்தில் 05 ஆண்டுகளை விட அதிக சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலர்களை இடமாற்றம் செய்ய எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்க செயற்படுவதென. | சுற்றறிக்கை பிரகாரம் இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் |